தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## **ஆணை நாள். 12.05.2026**

## **முன்னிலை**
## **திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
## **மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 13901/F/2024**

திரு.சா.பாஸ்கர், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
கடலூர் மாவட்டம்-607 006.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.சா.பாஸ்கர், அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திரமதி.அ.விஜயலட்சுமி, மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-2, மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், கடலூர் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 21.06.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், "கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், கடலூர் (O/T(NMPL) ஊராட்சி சாலையில் இருந்து புல எண்.(178/3A, 3B,4.6.7)(184/5B,66A,6B,7.8) நிலத்தை மனைகளாக பிரித்து செந்தாமரை நகர்என பெயரிட்டு DTCP அங்கீகாரம் பெற்று நில வணிகம் செய்ய பட்டு வருகிறது. செந்தாமரை நகருக்கு செல்ல பாதை வரைபடம் வழங்கவும்" என்பன போன்ற தகவல்களை 12 இனங்களில் வழங்கக் கோரிபொதுத் தகவல் அலுவலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோண்டூர், கடலூர் மாவட்டம்-607 006 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்காத காரணத்தால் மனுதாரர் 08.08.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னர் மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல்கள் வழங்காத காரணத்தால், 26.10.2024 தேதியிட்டு பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து ந.க.எண்.1129/2025/கமா, நாள் 12.11.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு வழங்கப்பட்டுள்ள தகவல்களில் இனம் 3, 6 மற்றும் 7-க்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், இனம் 1, 2, 4, 5, 8, 9, 10, 11 மற்றும் 12-க்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏற்புடையது என்றும் மற்ற இனங்களாக 3, 6, மற்றும் 7-க்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்து, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- **மனுதாரரின் 21.06.2024 தேதியிட்ட 6(1)-ன் கீழான மனுவில் கோரியுள்ள இனங்களாக 3, 6 மற்றும் 7-க்கு முழுமையான / சரியான தகவல்களை மனுதாரருக்கு <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

- **மனுதாரரின் 21.06.2024 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவிற்கு உரிய காலத்திற்குள் (30 தினங்களுக்குள்) தகவல்களை வழங்காததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்**

**திருமதி.கோ.மலர்கொடி, மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-2, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

- **மனுதாரரின் 08.08.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழான முதல்மேல்முறையீட்டு மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல்களை வழங்காததற்காக அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் (08.08.2024 தேதிய), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய மேல்முறையீட்டு அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**<u>வழக்கு எண். SA 13901/F/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கடலூர் மாவட்டம்-607 006.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்,**
**திருமதி.கோ.மலர்கொடி,**
**மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-2,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**கடலூர் மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் (08.08.2024 தேதிய),**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**கடலூர் மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.சா.பாஸ்கர்,
290, பிள்ளையார் கோவில் தெரு,
சான்றோர் பாளையம்,
கடலூர் மாவட்டம்-607 003.

**<u>நகல்</u>**

இயக்குநர்,
நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் அலுவலகம்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
E&C மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை-600 107.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For Followup).

Copy to: File NS/PA-